23.10.2017

தி இந்து
தமிழால் இணைவோம்

# தமிழகம், புதுச்சேரியில் இன்றும் மழை நீடிக்க வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்



வெப்பச் சலனம் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில், ஒருசில இடங்களில் இன்றும் மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்தம், ஒடிசா மாநில கடலோரப் பகுதியில் கரையைக் கடந்ததால், தமிழக கடலோரப் பகுதியில் இருந்த ஈரப்பதம், ஒடிசாவை நோக்கி ஈர்க்கப்பட்டது. அதனால் கடந்த சில நாட்களாக தமிழகத்தில் மழை குறைந்து வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்நிலையில் நேற்றும், நேற்று முன்தினமும், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒருசில இடங்களில் கனமழை பெய்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:

நாளை முதல் தெலங்கானா, வடக்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் தென்மேற்கு பருவக்காற்று விலகத் தொடங்குவதற்கு சாதகமான சூழல் ஏற்பட்டுள்ளது. அதற்கு அடுத்த சில தினங்களில் தமிழகத்திலும் விலகக் கூடும். அதன் பிறகு வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் தீவிரமடையும். கடந்த 24 மணி நேரத்தில் மாநிலத்தில் ஒருசில பகுதிகளில் கனமழை பெய்துள்ளது. அடுத்த 24 மணி நேரத்தை பொருத்தவரை தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒருசில இடங்களில் மழை நீடிக்கும். சென்னையை பொருத்தவரை ஒருசில இடங்களில் மழை பெய்யக்கூடும்.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு எடுக்கப்பட்ட மழை அளவின்படி, போளூரில் 10 செமீ, சிவகங்கையில் 8 செமீ, பேச்சிப்பாறையில் 7 செமீ, சத்ரபதி, திருச்சியில் தலா 6 செமீ, திருப்பத்தூர் (சிவகங்கை), வல்லம் (தஞ்சாவூர்), நாகப்பட்டினத்தில் தலா 5 செமீ, கடலூர், காமாட்சிபுரம், பொள்ளாச்சி, நாமக்கல்லில் தலா 4 செமீ மழை பதிவாகியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

**சென்னையில் திடீர் மழை**

சென்னையில் கடந்த ஒரு வாரமாக மழை இல்லாமல் இருந்த நிலையில், நேற்று காலை முதலே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அதேநேரத்தில் புழுக்கமும் அதிகமாக இருந்தது. இந்நிலையில் பிற்பகலில் திடீரென மழை பெய்யத் தொடங்கியது. திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், சிந்தாதரிப்பேட்டை, சைதாப்பேட்டை, கிண்டி, பெரம்பூர், வில்லிவாக்கம், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் 30 நிமிடங்கள் மழை நீடித்தது. இதனால் சாலையில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. வாகனங்கள் குறைந்த வேகத்தில் இயக்கப்பட்டன. அண்ணா சாலை, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சென்னையில் நேற்று காலை 8.30 முதல் மாலை 5.30 மணி வரை 2 செமீ மழை பதிவானது.

## நீலகிரியில் பெய்த தொடர் மழையால் அவலாஞ்சி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மூன்றாண்டுகளுக்கு பின்னர் நீர்



தொடர் மழையால் தண்ணீர் தேங்கி இயற்கை எழில் கொஞ்சும் போர்த்திஹாடா.

நீலகிரி மாவட்டத்தில் பெய்த தொடர் மழை காரணமாக மூன்றாண்டு பின்னர் அவலாஞ்சி நீர்ப்பிடிப்பு பகுதியில் தண்ணீர் வரத்தை கண்டு விவசாயிகள் மற்றும் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக பருவ மழை பொய்த்தது. இந்த ஆண்டு ஜூன் மாத தொடக்கத்திலேயே பருவ மழை தொடங்கியது. இதன் காரணமாக உதகை, குன்னூர், கூடலூர், கோத்தகிரி, மஞ்சூர் பகுதிகளில் தொடர் மழை பெய்தது.

கடந்த இரு ஆண்டுகளாக மழை பொய்தது. இதனால், மாவட்டத்தின் உள்ள முக்கிய அணைகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்து, மின் உற்பத்திக்கு சிக்கல் ஏற்பட்டது.

மின் உற்பத்திக்கு முக்கியமான அப்பர் பவானி, அவலாஞ்சி மற்றும் எமரால்டு அணைகளின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்தது. இதனால், இந்த அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகள் தண்ணீர் இல்லாமல் மேய்ச்சல் நிலமாக காட்சியளித்தன.

மழை பொய்த்ததால் தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் விவசாயப் பணிகள் மேற்கொள்ள முடியாமல் தவித்தனர்.

மேலும், சுற்றுலா பயணிகளும் அவலாஞ்சியின் இயற்கை எழிலை காண முடியாமல் ஏமாற்றம் அடைந்து வந்தனர்.

இந்நிலையில், அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை தொடர்ந்து பெய்ததால் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இதன் காரணமாக மூன்றாண்டு பின்னர் அணைகளின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது.

**இயற்கை எழில்**

இதனால், மேய்ச்சல் நிலமாக காட்சியளித்த அவலாஞ்சி நீர்ப்பிடிப்பு பகுதியான போர்த்திஹாடா பகுதியில் தண்ணீர் தேங்கியுள்ளது.

மூன்றாண்டுகளுக்கு பின்னர் அப்பகுதியில் தண்ணீரைக் கண்டு விவசாயிகள் மற்றும் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இப்பகுதியின் இயற்கை எழிலைக் காண போர்த்திஹாடா பகுதியை சுற்றுலா பயணிகள் முற்றுகையிட்டு வருகின்றனர்.

அங்கு, மழை காரணமாக பசுமையான தேயிலை தோட்டங்களை சூழ்ந்த கருமேகங்களும், நீல நிறத்தில் தேங்கியுள்ள தண்ணீரும் சுற்றுலா பயணிகளுக்கு கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் அப்பகுதியை முற்றுகையிட்டு, தங்கள் கண்களாலும், கேமராக்களாலும் காட்சியை படம் பிடித்துச் செல்கின்றனர்.